## பங்குபற்றும் அமைப்புகள்

- **African Canadian Social Development Council**
  (416) 658-5100
- **Alexandra Park Community Centre**
  (416) 603-9603
- **Alexandra Park Neighbourhood Learning Centre**
  (416) 591-7384
- **Atkinson Co-op**
  (416) 504-6993
- **Canadian Race Relations Foundation**
  (416) 952-3500
- **Canadian Arab Federation**
  (416) 493-8635
- **Community Social Planning Council of Toronto**
  (416) 351-0095
- **Co-operative Housing Federation of Toronto**
  (416) 465-8688
- **Council of Agencies Serving South Asians**
  (416) 979-8611
- **Davenport-Perth Neighbourhood Centre**
  (416) 656-8025
- **Delta Family Resource Centre**
  (416) 747-1172
- **Eastview Community Neighbourhood Centre**
  (416) 393-6354
- **Fort York Food Bank**
  (416) 203-3011
- **Hispanic Development Council**
  (416) 516-0851
- **Hong Fook Mental Health Association**
  (416) 493-4242
- **Jamaican Canadian Association**
  (416) 746-5772
- **Jane Finch Community Legal Services**
  (416) 398-0677
- **Jane/Finch Concerned Citizens Organization**
  (416) 880-2870
- **Justice for Children and Youth**
  (416) 920-1633
- **Kensington-Bellwoods Community Legal Services**
  (416) 924-4244
- **Midaynta Association of Somali Serving Agencies**
  (416) 544-1992
- **NEW Experiences for Newcomer Women**
  (416) 469-0196
- **Ontario Council of Agencies Serving Immigrants**
  (416) 322-4950
- **Regent Park Neighbourhood Initiative**
  (416) 981-6738
- **Scadding Court Community Centre**
  (416) 392-0335
- **Schizophrenia Society of Ontario**
  (416) 449-6830
- **South Asian Family Support Services**
  (416) 431-4847
- **South Asian Legal Clinic of Ontario**
  (416) 542-9146
- **South Asian Women's Centre**
  (416) 537-2276
- **St. Christopher House**
  (416) 848-7980
- **St. Stephen's Community House**
  (416) 925-2103
- **Street Health**
  (416) 921-8668
- **The 519 Church Street Community Centre**
  (416) 392-6878
- **Toronto Community Housing**
  (416) 981-5500
- **Toronto Police Accountability Coalition**
  (416) 977-5097
- **Toronto Police Service**
  (416) 808-2800
- **YMCA Youth Intervention and Outreach Services**
  (416) 504-1710

Scadding Court Community Centre
Toronto
The Law Foundation of Ontario
Toronto Community Housing
Canadian Heritage / Patrimoine canadien
Canada

# குடிவரவாளர் புதிதாய் வருவோர் அறிந்து நிற்றல்

# CEAPC

**COMMUNITY EDUCATION & ACCESS TO POLICE COMPLAINTS DEMONSTRATION PROJECT**

**சமூக அறிவு புகட்டல், காவற்துறை தொடர்பான முறையீடுகள் அணுகல் செயல்விளக்கத் திட்டம்**

Scadding Court Community Centre

ஸ்காடிங் கோர்ட் கொம்யூனிற்றி சென்ரர்

Language: Tamil

## CEAPC
## திட்ட அறிமுகம்

சமூக உறுப்பினர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு, காவற்துறை தொடர்பான முறையீடுகள் திட்டம் கிடைக்கக்கூடியதாக, அணுகக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துவதும், இதுபற்றிய அறிவுபெறும் சந்தர்ப்பங்களை வழங்குவதுமே CEAPC திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

இக்குறிக்கோளினை அடைவதற்கு எமக்கு உதவுவதற்காக 33 பங்குபற்றும் அமைப்புகள் எம்முடன் சேர்ந்து உள்ளன. காவற்துறையினர் உங்களை விசாரணைக்கு உட்படுத்தும்பொழுது அல்லது உங்கள் வீட்டுக்கு வரும்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது என்ன என்பது பற்றியும், ஆதரவும் சட்ட உதவியும் பெறுவது எங்கே என்பது பற்றியும், மேலதிக அறிவை நீங்கள் பெற இவ்வமைப்புகள் உங்களுக்கு உதவும்.

## காவற்துறையினரால் நிறுத்தப்படுதல்

***காவற்துறையினர் என்னை நிறுத்தி நான் யார் என்று கேட்டால்?***

நீங்கள் யாரென்று காவலற்துறையினரிடம் சொல்ல வேண்டும். அவர்கள் தேடிவருகின்ற நபர் நீங்கள்தான் எனத் தவறாக அவர்கள் கருதக்கூடிய சிக்கல் நிலை-யைத் தவிர்ப்பதற்காக இவ்வாறு செய்ய வேண்டும்.

காவற்துறையினர் உங்களுடைய அடையாள அத்தாட்சியினைக் கேட்டால் அதனை அவர்களுக்குக் காட்ட வேண்டும்.

நீங்கள் குற்றச்செயல் ஒன்றைச் செய்திருக்கக் கூடுமென்று காவற்-துறையினர் நினைக்க நேர்ந்தால், நீங்களும் அவர்களுக்கு உங்களை யாரெனக் கூறத் தவறினால், நீங்கள் யாரென அறியும் வரையில் அவர்கள் உங்களைக் கைது செய்து வைத்திருக்கக் கூடும்.

*நீங்கள் வேறு எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று உங்களுக்குத் தெரியுமா?*

*அப்படி நீங்கள் பதில் கூறினால், நீங்கள் கைது செய்யப்படவும் நேரிட்டால், நீங்கள் கூறுபவை உங்களுக்கு எதிராகப் பயன் படுத்தப்படலாம்.*

**நீங்கள் மரியாதையுடன் கதைக்கவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்.** நீங்கள் அவ்விடமிருந்து அகன்று செல்வதற்கு அனுமதி உண்டா அல்லது கைது செய்யப்பட்டு உள்ளீர்களா எனக் காவற்துறையினரிடம் கேட்கலாம்.

***நான் வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கையில் காவற்துறையினர் என்னை நிறுத்தினால் என்ன செய்வது?***

நீங்கள் வாகனம் ஓட்டிக்கொண்டு செல்லும்பொழுது காவல் துறையினர் உங்களை நிறுத்தி உங்கள் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம், வாகனப் பதிவுப்பத்திரம், காப்புறுதி ஆகியவற்றைக் கேட்க முடியும். இவற்றை உங்களால் காட்டமுடியாது போனால் மாகாண ரீதியிலான குற்றச்சாட்டு ஒன்று உங்கள்மீது சுமத்தப்படும். இதனை நீங்கள் மாகாண ரீதியிலான நீதிமன்றம் ஒன்றில் எதிர்த்து வாதாட முடியும்.

## காவற்துறையினரால் சோதனையிடப்படுதல்

***காவற்துறையினர் என்னைச் சோதிக்க வேண்டுமென்றால் என்ன செய்வது?***

சட்டவிரோதமான எதனையும் நீங்கள் உங்களிடம் வைத்திருக்கிறீர்கள் எனக் காவல்துறையினர் நம்புவதற்குக் காரணம் இருந்தால் , அல்லது உங்களை அவர்கள் கைது-செய்ய நேர்ந்தால் , உங்களையும், உங்கள் ஆடைகளையும், நீங்கள் கொண்டுசெல்லும் எப்பொருளையும் அவர்கள் சோதனையிட முடியும். "அறிவுபூர்வமான ஒப்புதல்" அல்லது அனுமதி அவர்களுக்கு நீங்கள் வழங்கினாலும் அவர்கள் உங்களைச் சோதனையிடலாம். நீங்கள் கைது செய்யப்பட்டு இருக்கவில்லை என்றால் சோதனையிடப்-படுவதற்கு நீங்கள் எப்பொழுதும் மறுக்க முடியும். ஆனால் சோதனைக்கு ஒத்துக்கொள்ளுவது சந்தேகத்தைக் குறைக்க உதவக்கூடும்.

*நீங்கள் கைதுசெய்யப்பட்டால் அல்லது தடுத்து வைக்கப்பட்டால் இவற்றைச் செய்ய உங்களுக்கு உரிமை உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா?*

- *ஏன் நீங்கள் கைது செய்யப்படுகிறீர்கள் அல்லது தடுத்து வைக்கப்படுகிறீர்கள் என்பதை அறிதல்.*
- *உடனடியாகவே ஒரு சட்டத்தரணியுடன் தனிமையில் பேச முடிதல்.*
- *லீகல் எயிட் எனப்படும் சட்ட உதவி அமைப்பின் சட்டத்தரணி ஒருவரிடம் இலவச சட்டஆலோசனை பெறுதல். காவல் துறையினர் இதற்கான தொலைபேசி இலக்கத்தை உங்களுக்குத் தரவேண்டிய கடப்பாடு உண்டு. மறுபக்கத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ள, எம்முடன் பங்குபற்றும அமைப்புகளில் ஒன்றுடன் தொடர்பு கொண்டும் நீங்கள் சட்டத்தரணியை ஏற்பாடு செய்யலாம்.*

***காவற்துறையினர் எனது வீட்டைச் சோதனையிட வேண்டுமென்றால் என்ன செய்வது?***

உங்கள் வீட்டைச் சோதனையிடுவதற்கான தேடல் ஆணை ஒன்றைக் காவற்துறையினர் வைத்திருந்தால் அல்லது, அங்கு குற்றச்செயல் ஒன்று இடம்பெறுகிறது என நம்பக் காரணம் இருந்தால் மட்டுமே உங்கள் வீட்டை அவர்கள் சோதனையிட முடியும்.

**தேடல் ஆணை** என்பது குறித்த ஒரு இடத்தைக் குறித்த ஒரு திகதியன்று சோதனையிடக் காவற்துறையினருக்கு வழங்கப்படும் நீதிமன்றப் பணிப்புரை ஆகும்.

*உங்கள் முகவரியில் இருந்து 911 என்ற இலக்கத்துக்குப் போகும் தொலைபேசி அழைப்பு ஒன்று துண்டிக்கப்படுமானால் உங்கள் அனுமதி இன்றியே காவற்துறையினர் உங்கள் வீட்டுக்குள் புகமுடியும் என்று உங்களுக்குத் தெரியுமா?*

தேடல் ஆணை ஒன்றுடன் காவற்துறையினர் உங்கள் வீட்டுக்கு வந்தால், அந்த ஆணையைப் பார்க்க வேண்டுமென நீங்கள் கேட்டுப் பெற்று இவற்றை நீங்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்:

- அதிலுள்ள முகவரி உங்களுடையதாக இருத்தல்
- ஆணையில் குறிப்பிடப்பட்ட அதே நேரத்திலேயே காவற்துறையினர் உங்கள் வீட்டுக்கு வந்திருத்தல்
- தேடல் ஆணையில் ஒரு நீதிபதி அல்லது சமாதான நீதவான் கையொப்பமிட்டு இருத்தல்
- தேடும் பொருட்களை உண்மையில் காணக்கூடிய இடங்களில் மட்டுமே காவற்-துறையினர் தேடுதல் (உதாரணமாக, திருடப்பட்ட ஒரு 36 அங்குலத் தொலைக்காட்சிப் பெட்டியை உங்கள் நகைப் பெட்டியில் அவர்கள் தேடமுடியாது)

*தேடல் ஆணையில் நிரல்படுத்தப்பட்டு உள்ள அத்தாட்சியைத் தேடும்போது, காவற்துறையினர் பிறிதொரு குற்றச் செயலுடன் தொடர்புடைய வேறு ஏதாவது ஒன்றைக் கண்டுபிடிக்க நேரிட்டால் அவர்கள் அதனை எடுத்துச் சென்று ஒரு அத்தாட்சியாகப் பயன்படுத்த முடியும் எனஉங்களுக்குத் தெரியுமா?*

## நீங்கள் செய்யக் கூடியவை

சட்டவிரோதமாக அல்லது நல்ல காரணம் எதுவும் இன்றி நீங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறீர்கள் என நீங்கள் நம்பினால் காவற்துறை உத்தியோகத்தரிடம் அத்தேடுதலுக்கு நீங்கள் உங்கள் ஆட்சேபனையைத் தெரிவிப்பதாக அந்தச் சமயத்திலேயே சொல்ல வேண்டும். அந்த உத்தியோகத்தருக்கு எதிராக காவற்துறை தொடர்பான ஒரு முறையீட்டினைத் தாக்கல் செய்யும் உரிமையும் உங்களுக்கு உண்டு. இம்முறையீட்டினை நீங்கள் ஸ்காடிங் கோர்ட் கொம்யூனிற்றி சென்ரர் அமைப்பின் ஊடாக, அல்லது (மறுபக்கத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ள) எம்முடன் பங்குபற்றும் அமைப்புகளில் ஒன்றின் ஊடாகத் தாக்கல் செய்யமுடியும். அல்லது பின்வரும் இணையத்-தளத்துக்குச் சென்று ஒரு முறையீட்டுப் படிவத்தை நீங்கள் பூர்த்தி செய்யலாம்:

**www.scaddingcourt.org**
**www.torontopolice.on.ca**
**www.occps.on.ca**

***மேலதிக தகவலுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்***

Project Coordinator
Scadding Court Community Centre
707 Dundas Street West
Toronto, Ontario M5T 2W6

Phone: (416) 392-0335 x 233
Fax: (416) 392-0340
Email: lsarangi@scaddingcourt.org
www.scaddingcourt.org